**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure.)**

**------**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

| | |
|---|---|
| **Calender Case** | **CC. 175/2021** |
| **Miscellaneous** | |
| **Preliminary Register** | |
| **Sessions** | |
| **Deposition of witnesses for** | PW - 3 |

| | | |
|---|---|---|
| **Name** | : | சீனிதேவர் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1873 of the day of 15-12-2022**

**முதல் விசாரணை**

நான் கீழஉரப்பனூரில் வசித்து வருகிறேன். புகார்தாரர் என்னுடைய மனைவி ஆவார். காந்தியம்மாளுக்கு 87 வயது ஆகிறது. காந்தியம்மாளுக்கு எழுதப்படிக்க தெரியாது. காந்தியம்மாள், ரோகிணி, மணிகண்டன் ஆகியோர் மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது. 1ம் எதிரி மணிகண்டன் என்னுடைய மகன் ஆவார். 2ம் எதிரி முருகேஸ்வரி என்னுடைய மருமகள் ஆவார். 3 ம் எதிரி ரோகிணி என்னுடைய பேத்தி ஆவார். எனக்கு திருமணத்தின் போது என்னுடைய மாமனார் சீர்வரிசை பொருளோடு நிலமும் கொடுத்தனர். அந்த நிலத்தை விற்ற பணத்தை எல்லாம் என்னுடைய மனைவி காந்தியம்மாள் பெயரில் பாண்டியன் கூட்டுறவு வங்கியில் போடப்பட்டுள்ளது. 1 ம் எதிரியான மணிகண்டனும், என்னுடைய மனைவி காந்தியம்மாளும் சேர்ந்து தான் பணத்தை எடுக்க வங்கிக்கு செல்வார்கள். அந்த பணத்தை எடுத்துதான் வீட்டு மனை வாங்கினர். அந்த பணத்தை வைத்துதான் நான் வீடு வாங்கினேன். நான் என்னுடைய மனைவி காந்தியம்மாள், ரோகிணி, மணிகண்டன் அனைவரும் ஒரே வீட்டில் தான் இருந்தோம். என் மனைவியை கொஞ்ச வருடங்களுக்கு முன்பு மணிகண்டன் அடித்து விட்டார். அதில் அவருக்கு காதில் காயம் ஏற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டார். அதன் பிறகு என் மனைவியை வீட்டை விட்டுவெளியே துரத்தி விட்டு வேறொரு நபருக்கு ஒத்தி வைத்து விட்டார்.

**எதிரி தரப்பில் கு.வி**. இல்லை